[23rd July 1962

திருச்சிராப்பள்ளி நகர சாக்கடைத் திட்டம்

* 548 கேள்வி.—திரு. எம். எஸ். மணி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சிராப்பள்ளி நகரத்தில் ஓடுகின்ற எல்லாக் கழிவு நீர் சாக்கடைகளையும் காவிரி நதியின் மேற்குப் பகுதியில் கொண்டு போய்க் கலக்க விடுகிறார்கள் என்பதும் அதன் காரணமாக சுகாதாரம் கெடுகிறது என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா?

(இ) அப்படியானால், இதைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM (அ) & (இ) The Government are aware that some amount of sullage water is let into the Cauvery river just near Chinthamani. Due to the natural dilution available at this site, the question of health hazard to any material extent does not arise. A partial drainage scheme for diverting the sullage flowing into the river Cauvery upstream of the bathing ghat is already in operation.

* 549 கேள்வி.—திரு. எம். எஸ். மணி: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி நகராட்சி புதை சாக்கடைத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளதா?

(இ) அப்படியானால், திட்ட காலத்திற்குள் வேலை முடியுமா?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (அ) Yes, Sir.

(இ) The work will be taken up for execution during the end of the Third Five-Year Plan period. It is expected to be completed during the Fourth Five-Year Plan period.

Prohibition Act (implementation)

* 550 *Q.*— SRI K. MOOKIAH THEVAR: Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to review the method adopted and the working of the machinery set up for the effective implementation of the Prohibition Act?

THE HON. SRI P. KAKKAN: No, Sir.

திரு. கே. மூக்கையா தேவர்: இப்போது இருக்கிற சட்டப்படி குற்றம் செய்தவர்கள் மட்டும் தண்டிக்கப்படுவதில்லை; குற்றம் செய்யாதவர்களும், அப்பாவிகளும் இந்தச் சட்டத்தின் காரணமாகப் பிடிக்கப்பட்டுச் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். ஆகையால் இந்தச் சட்டத்தைத் திருத்தி, குற்றம் செய்தவர்கள் மட்டும் தண்டிக்கப்படக்கூடிய நிலைமையைச் சர்க்கார் ஏற்படுத்துவார்களா?

23rd July 1962]

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது இருக்கிற சட்டத்தை மாற்ற எந்த விதமான அபிப்பிராயமும் கிடையாது. யார் யார் குடிக்கிறார்களோ, யார் யார் காய்ச்சுகிறார்களோ, யார் யார் சாராயம் காய்ச்சும் சாமான் வைத்திருக்கிறார்களோ, யார் யார் அதற்கு ஒத்தாசை பண்ணுகிறார்களோ அவர்களெல்லாம்தான் தண்டிக்கப்படுகிறார்கள்.

திரு. கே. மூக்கையா தேவர் : குடிப்பவர்கள், குடிக்கக் காரணமாக இருப்பவர்கள், சாமான் வைத்துக்கொண்டிருப்பவர்கள் தண்டிக்கப்படுவதைப்பற்றி கவலை இல்லை. போலீஸ் ஒவ்வொரு மாதமும் இவ்வளவு கேஸ்கள் பிடிக்க வேண்டுமென்ற நிர்ணயம் இருப்பதால் அப்பாவிகள் தண்டிக்கப்படக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. இதைத் தடுக்க அரசாங்கம் முயற்சிக்குமா ?

கனம் திரு. பூ. கக்கன் : நாட்டிலே இருக்கும் ஏழை மக்களின் நன்மையைக் கருதித்தான் இந்த மதுவிலக்குச் சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். நிரபராதிகளாக இருந்தால், கோர்ட்டிலே சொல்லலாம், அதிகாரிகளிடத்தில் சொல்லலாம்.

திரு. டி. எல். சசிவர்ண தேவர் : தங்களுக்கு வேண்டாத ஆட்களை, இந்தச் சட்டத்தைச் சாதகமாக வைத்துக்கொண்டு போலீஸ்காரர்கள் தாங்களே சாராயப் பாட்டிலைக் கொண்டுபோய் வைத்துப் பிடித்துக்கொண்டு போகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : பொறுப்பு வாய்ந்த போலீஸ்காரர்கள் அப்படி ஒன்றும் செய்யமாட்டார்கள் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கே. மூக்கையா தேவர் : சார், இந்த மாதிரி அப்பாவிகள் தண்டிக்கப்படுவதில்லை, அவர்களுடைய நன்மைக்காகத்தான் இந்தச் சட்டம் இருக்கிறது என்று கனம் அமைச்சர் அவர்கள் சொன்னாலும், தற்போது தண்டிக்கப்படுபவர்களையெல்லாம் பார்த்தால் அப்பாவிகளாகத்தான் இருக்கிறார்கள்.

மிஸ்டர் ஸ்பீக்கர் : நீங்கள் சொல்லும் அப்பாவிகள் யார் என்று தெரியவில்லை. நீங்களும் 'அப்பாவிகள்' என்று சொல்கிறீர்கள், மந்திரியும் 'அப்பாவிகள்' என்று சொல்கிறார். அந்த 'அப்பாவிகள்' கோபித்துக்கொள்ளமாட்டார்களா ?

திரு. கே. மூக்கையாத் தேவர் : பாதிக்கப்பட்டவர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை எடுத்துச் சொல்லவேண்டுமென்று கேட்டுக்கொண்ட காரணத்தினால்தான் சொல்கிறேன். அதிகப்படியான நபர்கள் அப்பாவிகளாகத்தான் இருக்கிறார்கள்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தண்டிக்கப்பட்டவர்கள், நியாயமாகத் தண்டிக்கப்பட்டவர்கள், இல்லையா என்பதை முடிவு செய்ய சுப்ரீம் கோர்ட்வரையில் செல்லலாம். அதற்குமேல் அப்பீல் மந்திரிகளுக்குக் கிடையாது.

[23rd July 1962

திரு. கே. மூக்கையா தேவர்: அவர்கள் ஏழைகளாக இருக்கும் காரணத்தினுல் சுப்ரீம் கோர்ட்வரை போக முடியாது. அரசாங்கம் பொதுவாக இதிலே அக்கறை எடுத்துக் கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. பூ. கக்கன்: திருட்டுச் சாராயம் காய்ச்சுபவர்கள் மீதுதான் போலீஸ்காரர்கள் நடவடிக்கை எடுப்பார்களே தவிர, நிரபராதிகள்மீது நிச்சயமாக நடவடிக்கை எடுக்கமாட்டார்கள்.

SRI M. WILLIAM: Sir, has any complaint been brought to the notice of the Government that persons who have taken liquor are very often arrested under Prohibition Act because the smell produced by taking liquor is that of taking alcohol, i.e., the smell of liquor is same as that of alcohol: Also will the Government stop the issue of permits for storing liquor?

THE HON. SRI P. KAKKAN: I have no such information. The hon. Member Sri M. William, may put a separate question.

திரு. டி. கார்ச்சா கவுடர்: சார், இப்போது போலிசாருக்குள்ள பலதரப்பட்ட வேலைகளின் காரணமாக இந்தச் சாராயம் காய்ச்சுபவர்கள் பெருமளவில் கிராமப் பகுதிகளில் புகுந்து தப்பித்துக்கொண்டிருக்கிறார்கள். போலீஸ் இலாகாவில் தனிப் பிரிவு ஏற்படுத்தி இந்தச் சமூக விரோதக் கும்பல்களை ஒழிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?

கனம் திரு. பூ. கக்கன்: போலீஸ் இலாகவே பார்த்துக் கொள்ள முடியும். தனியாக அமைக்கவேண்டிய நிர்ப்பந்தம் இல்லையென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆ. கு. சுப்பையா: சார், சாராயம் காய்ச்சாதவர்கள் மீதும் இந்த மாதிரி கேஸ் போடப்படுகிறது என்ற சர்ச்சையைத் தவிர்க்க, துப்பறியும் இலாகாவின்மூலமாக யார் யார் உண்மையிலேயே சாராயம் காய்ச்சுகிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்க அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. பூ. கக்கன்: இதற்காகத் தனியாக ஒரு துப்பறியும் இலாகா வைத்துச் செலவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

திரு. கரு. சீமைச்சாமி: சார், வருஷா வருஷம் மதுவிலக்குக் குற்றங்கள் அதிகரித்துக்கொண்டே போகின்றன. ஆகவே, மதுவிலக்குச் திட்டம் தோல்வியடைந்திருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் ஒப்புக்கொள்வார்களா?

கனம் திரு. பூ. கக்கன்: மதுவிலக்குக் குற்றங்கள் அதிகமாகி இருக்கின்றன என்பதை ஒத்துக்கொள்ள முடியாது. மதுவிலக்குத் திட்டத்தினுல் அரசாங்கத்திற்கு வெற்றியும், நன்மையும் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

23rd July 1962]

திரு. அ. ராகவ ரெட்டி : ஆந்திரப் பகுதியிலிருந்து நம்முடைய மாகாணத்திற்கு ஏராளமான சாராயம் வருவதன் காரணமாக, **கனம்** அங்கத்தினர் மூக்கையாத் தேவர் அவர்கள் சொன்னது மாதிரி, அப்பாவிகள் பிடிக்கப்படுகிறார்கள் என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு பூ. .கக்கன் : இந்தக் கேள்விக்கு ஏற்கனவே பதில் சொல்லிவிட்டேன். நிரபராதிகள் ஒருக்காலும் தண்டிக்கப்பட மாட்டார்கள்.

திரு. அ. ராகவ ரெட்டி : ஆந்திரப் பகுதியிலிருந்து சாராயம் வருவதன் காரணமாகத்தான் அவர்கள் தண்டிக்கப்படவேண்டிய ஒரு நிலைமை ஏற்படுகிறது என்பது சர்க்காருக்குத் தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : திருட்டுத்தனமாகக் கொண்டுவரப் படும் சாராயத்தை வாங்குபவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். வாங்காமல் இருப்பவர்கள் தண்டிக்கப்படுவதில்லை.

திரு. ஜே. மாதா கவுடர் : தேர்தல் காலத்தில் சுதந்திரக் கட்சிக் காரர்கள் அதிகமாக சாராயத்தை வழங்கி மக்களிடத்திலிருந்து வோட்டு வாங்கினார்கள் என்று கிராமங்களில் பேசப்படுகிறது. அது பற்றி அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

திரு. சா. கணேசன் : பதிலுக்குப் பதில் சொல்ல நான் விரும்ப வில்லை. 'சுதந்திரக் கட்சிக்காரர்கள் சாராயம் வழங்கினார்கள்' என்று காங்கிரஸ் உறுப்பினர் சொன்னால், அதை வேறு விதமாக திருத்தியும் நான் போடலாம். அது நாகரிகம் அல்ல என்பதால், அப்படி இல்லை' என்பது கனம் அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : 'இருக்கிறது', 'இல்லை' என்பதற்கு என்னிடம் தகவல் இல்லை.

Sri C. CHIRANJEEVULU NAIDU : Sir, is not the question of the hon. Member Sri J. Matha Gowder an insinuation against the members of a Party and may I request the Chairman not to allow such questions?

Mr. SPEAKER : I quite agree with the hon. Member, Sri C. Chiranjeevulu Naidu.

திரு. ஆர். எஸ். ஆறுமுகம் : பழரசத்தை மதுவாக்கி அருந்தி வருவது நாட்டில் அதிகமாகப் பரவிவருவது சர்க்காருக்குத் தெரியுமா ? அதைத் தடுக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. பூ. கக்கன் : எந்த ரசமாக இருந்தாலும் மது பான மாக உபயோகப்படுத்தப்பட்டால், அவ்வாறு உபயோகப்படுத்து பவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். தண்டாயுதபாணி பிள்ளை : மதுவிலக்குக் குற்றம் செய்பவர்களுக்கு அபராதம் விதித்த பிறகு, மீண்டும் குற்றம் செய்தால் அவர்களுக்குச் சிறை தண்டனை அளிக்க சர்க்கார் முன் வருமா ?

கனம் திரு. பூ. கக்கன் : சிறை தண்டனை, அபராதம் எல்லாம் போட்டுக்கொண்டுதான் வருகிறோம்.

மிஸ்டர் ஸ்பீக்கர் : கனம் அங்கத்தினர், கட்டாயம் சிறை தண்டனை கொடுக்க வேண்டுமென்கிறார்.

கனம் திரு. பூ. கக்கன் : இப்போது இருக்கும் சட்டத்திலேயே அதற்கு இடம் இருக்கிறது.

திரு. கே. பொன்னையா : சார், கொலைக் குற்றம், திருட்டுக் குற்றம் செய்தவர்களைப் போலீஸ் நாய்களை வைத்துப் பிடிப்பது போல், கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களையும் அந்தப் போலீஸ் நாய்களை வைத்துப் பிடிக்க அந்த நாய்கள் பழக்கப்படுமா ?

9-00 க.ம. **கனம் திரு. பூ. கக்கன் :** போலீஸ் இலாகா இதைக் கவனித்துக் கொண்டிருக்கிறது. நாய்களை உபயோகப்படுத்த வேண்டிய அவசியமில்லை.

திரு. டி. கார்ச்சா கவுடர் : எங்கள் ஜில்லாவில் இந்த சாராயத்திற்குப் பதிலாக ஸ்பிரிட் குடித்து அநேகப் பேர்கள் கெட்டுப் போகிறார்கள். ஆகவே இந்த ஸ்பிரிட் விற்பனையை கட்டுப்படுத்தவோ அல்லது தடை செய்யவோ முயற்சிக்கப்படுமா ?

கனம் திரு. பூ. கக்கன் : ஸ்பிரிட் வழங்கும்போதுகூட, மோசமாக சாராயம் காய்ச்சவோ அல்லது லிக்கர் உண்டுபண்ணவோ வாங்கினால் அப்பேர்ப்பட்டவர்களுக்கு கொடுக்க அரசாங்கம் முன் வராது, கொடுப்பதில்லை. எவ்வளவு தூரம் பார்த்து தடுக்க வேண்டுமோ அப்படி செய்ய முயற்சி செய்து கொண்டிருக்கிறது.

மதுபானம் (அனுமதிகள்)

* 551 கேள்வி.—**திரு. முனு ஆதி :** கனம் விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1961-62-ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் எத்தனை பேர்களுக்கு மது அருந்துவதற்கான லைசென்சுகள் வழங்கப் பட்டுள்ளன ?

(இ) எந்த அடிப்படையில் அவர்களுக்குக் குடிப்பதற்கான பர்மிட்டுகள் வழங்கப்பட்டுள்ளன ?

(உ) இதனால் அரசாங்கத்திற்கு கிடைத்துள்ள வருவாய் எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : (*a*) Ninety-nine persons.

(*b*) Resident foreigners are granted permits by the Board of Revenue. Tourists and temporary residents can get permits from the Collectors. Indian visitors from other States can get temporary